BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரின் கொல்லைப்புற தோட்டம் அமைக்கும் திட்டம் பிப்ரவரி 6 ஆம் தேதி துவங்கவிருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜனவரி 27, 2023) – நான்காவது ஆண்டாக திரும்பவும் வருகின்ற இந்த ப்ராம்ப்ட்டன் நகர கொல்லைப்புறத் தோட்டம் அமைக்கும் நிகழ்ச்சித்திட்டமானது பெருமளவிலான ஆதரவுடன் திரும்பவும் வருகிறது; இதற்கான பதிவுகள் பிப்ரவரி 6 ஆம் தேதி துவங்குகிறது.

குடியிருப்புவாசிகள் தங்கள் சொந்த வசதிக்கேற்ப, தங்கள் வீட்டில் இருந்தபடியே, காய்கறிகள் மற்றும் மூலிகைக் கீரைகளைப் பயிரிட்டு தங்கள் வளர்ப்பில் உற்பத்தியான பயிர் வகைகளை உள்ளூர் உணவு வங்கிகள் மற்றும் சமுதாய அமைப்புக்களுக்கு வழங்குவதை இந்தத் திட்டம் உற்சாகப்படுத்துகிறது. ஒவ்வொரு பங்கேற்பாளரும் ஐந்து பைகள் நிறைய வளமான மண் மற்றும் தோட்டம் அமைப்பதற்கான விதை தொகுப்பு (இதில் வெவ்வேறு வகையான விதைகள் அடங்குகின்றன) ஒன்றைப் பெறுவார்கள்.

இந்தத் திட்டம் ஏகபோகமாக பிரபலம் அடைந்துவிட்டமையாலும் இதன் வெற்றி காரணமாகவும் புதிதாக வரும் பங்கேற்பாளர்களுக்கு மட்டுமே இந்த அனுபவம் வழங்கப்படும்.

**2022 நிகழ்ச்சித்திட்டத்தின் விவரங்கள்**

- 2,921 பங்கேற்பாளர்கள்
- 14,635 பைகளில் நிறைத்த மண், மற்றும் 5,836 விதை தொகுப்புக்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன

நிகழ்ச்சித்திட்டம் பற்றிய மேலும் தகவல்கள் பெறுவதற்கும், தோட்டம் அமைப்பது பற்றிய பயிற்சிப்பாடங்கள் மற்றும் குறிப்புக்களுக்கும் வருகை தரவும் www.brampton.ca/backyardgarden

**மேலும் கற்றுக்கொண்டு நமது கொல்லைப்புற தோட்டம் அமைக்கும் கிளப்-இல் இணையுங்கள்**

நீங்கள் ஏற்கனவே கொல்லைப்புறத் தோட்டம் அமைக்கும் திட்டத்தில் பங்கேற்றிருந்தாலும், தொடர்ந்து ஈடுபட விரும்பினாலும் - நகரின் மாதாந்திர கொல்லைப்புறத் தோட்டம் அமைக்கும் கிளப்பில் சேரவும்! அனைத்து தோட்டக்கலை ஆர்வலர்களையும் வரவேற்கும் இந்த கிளப் ஆனது தோட்டம் அமைப்பதற்கான தகவல்களைக் கொண்ட மாதாந்திர மின்-செய்திமடலை வழங்குகிறது; குடியிருப்பாளர்கள் தோட்டக்கலை சம்பந்தமான கேள்விகளை அனுப்புவதற்கான வாய்ப்பை இது வழங்குகிறது; மற்றும் நிபுணர்களிடமிருந்தும் மற்றும் ப்ராம்ப்ட்டன் தோட்டக்கலை சொசைட்டி மற்றும் சிங்க்வாகவ்ஸி கார்டன் கிளப் ஆகியவற்றிலிருந்து தோட்டக்கலை ஆலோசனைகள் மற்றும் ஆதரவைப்

பெறுங்கள் மற்றும் பிரத்தியேக சலுகைகளையும் மற்றும் பலவற்றையும் பெறுங்கள்! பதிவுக்கு வருகை தாருங்கள்:Visit www.brampton.ca/backyardgarden .

2023 ஆண்டில் பெருந்தன்மையாக நிதியாதாரம் வழங்கிய ஸ்காட்ஸ் கனடா லிமிடெட் (Scotts Canada Ltd), மட்டாமி ஹோம்ஸ் (Mattamy Homes), ஃபீல்ட்கேட் டிவலப்மெண்ட்ஸ் (Fieldgate Developments) மற்றும் பாரடைஸ் டிவலப்மெண்ட்ஸ் (Paradise Developments) ஆகிய அமைப்புக்களுக்கு நகர நிர்வாகம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

**அறிஞர் கூற்றுக்கள்**

“கொல்லைப்புறத் தோட்டம் அமைக்கும் திட்டத்தை மீண்டும் வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் மற்றும் கடந்த ஆண்டு நன்கொடையாக வழங்கப்பட்ட 7,000 பவுண்ட் எடை கொண்ட விளைபொருட்களின் வெற்றியின் பேரில் மீண்டும் இத்திட்டத்தைக் கட்டமைக்கிறோம். இந்தத் திட்டமானது, உள்ளூரில் இவ்வகை விளைபொருள் தேவைப்படுபவர்களுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கிறது மற்றும் நாம் ஒரு சமூகமாக ஒன்றிணைவதால் நாம் செய்யக்கூடிய வித்தியாசமான கூட்டுறவை நிரூபிக்கிறது. 2023 விளைச்சல் முழுவதையும் காண ஆவலுடன் காத்திருக்கிறேன்.!”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“கடந்த ஆண்டு 2,921 பங்கேற்பாளர்களைக் கொண்டபடி, நமது சமூகத்தில் பலருக்கும் பயனளிக்கும் வகையிலான இந்த சுற்றுச்சூழல் நட்புறவான முயற்சியில் நமது குடியிருப்பாளர்களின் பங்கேற்பைப் பார்ப்பது ஊக்கமளிக்கிறது. நமது உள்ளூர் சமூகத்தை ஆதரிப்பதில் வணிகங்கள் வகிக்கும் பங்கை அங்கீகரிக்கின்ற நமது ஸ்பான்சர்களுக்கும், நமது குடியிருப்பாளர்களுக்கான உணவுப் பாதுகாப்பிற்கு ஆதரவாக இந்த முயற்சிக்கு பங்களித்த அனைவருக்கும் நகரம் நன்றிக்கடன் பட்டுள்ளது..”

*- ரொவீனா சான் ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

BRAMPTON

**Media Release**

**ஊடக தொடர்பு**

**ப்ராம்ப்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்**

multiculturalmedia@brampton.ca